554

# மறைந்த மாவீரன்



OF THE REGISTR
MADRA

அமகிரிசாமி நூல் நிலையம்

R34wN98
N49
113786

1949. [ அணா 0-3-0.

# மறைந்த மாவீரன்.

ஆசிரியர் :-

**P. V.** லிங்கம்.

திருவாரூர்.

**1949**

அழகிரிசாமி நூல் நிலையம்,

82, காரைக்காட்டுத் தெரு,

திருவாரூர்.

## பெருமூச்சு.

**மு. கருணாநிதி.**

"அஞ்சா நெஞ்சன் அழகிரி அழித்த பயங்கர காடு தான் இன்றைய திராவிடர் கழக எழிற்பூங்கா" அந்த அழகிரி மறைந்து மாதங்களும் பல உருண்டுவிட்டன. அந்த மாவீரனின் பெயரால் ஒரு 'நினைவுநாள்' காணோம். தஞ்சை நண்பர்கள் நினைவுச் சின்னமொன்று அமைத்து நிறுத்திவிட்டார்கள். க்ஷய ரோகத்தை தன் பணிக்குப் பரிசாகப் பெற்று எலும்பாகி—மறைந்துபோனார் அழகிரி. அழகிரியின் கதிதான் மற்றவர்க்கும் ஏற்படுமோ என ஏங்கிய வேளையில் கலைவாணர் கிருஷ்ணன் "கலங்காதீர் கழகமில்லையெனினும் கலையுலகமிருக்கிறது" என கைகொடுத்தார். அழகிரி குடும்பத்துக்கு இது ஒரு ஆறுதல். அழகிரி மருந்துச் செலவுக்காக நூறு ரூபாய் அனுப்பி அந்த அஞ்சல் ரசீதை தனக்கு அனுப்பினால்தான் பொதுக்கூட்டங்களுக்கு வருவேன் என்று அதன்மூலம் உதவிபுரிந்தார் அண்ணா. "அண்ணா இருக்கிறார் ஜெயமுண்டு பயமில்லை" என சிந்து பாடினோம் நாம். அழகிரியின் வரலாறுகள் இரண்டொன்று நாட்டுக்குத் தரப்பட்டுள்ளன. தோழர் **P. V. லிங்கம்** அவர்கள் சித்தரித்துள்ள இந்த "**மறைந்த மாவீரன்**" ஒரு குறள் சித்திரம். அழகிரிசாமியை நம் எதிரே நிற்கவைக்கிறார் இதன் ஆசிரியர். முன்னாள்தொட்டு முன்னணி எழுத்தாளர் பட்டியலில் ஒருவரான தோழர் **P. V. லிங்கம்** கண்ணீர்த் துளிகளைக் கட்டுரையாக்கி, கட்டுரையை சிறு நூலாக்கி நம்மிடையே தருகிறார். உணர்ச்சி மிகுந்த நடை—கோழையுள்ளத்தையும் உரம் பெறச் செய்யும் வேகமான எழுத்து வன்மை இத்தனையும் பொருந்தியுள்ள தோழர் அவர்கள் இன்னும் பல நல்ல கருத்துப் பேழைகளை நாட்டுக்கு நல்குவாரென நம்புகிறேன். வாழிய அழகிரியின் புகழ்!

முகாம்: சேலம்,<br>
26-7-49.

அன்புள்ள,<br>
**மு. கருணாநிதி.**<br>
திருவாரூர்.

# கூறினல் குற்றமாகுமா ?

அன்று அஞ்சாநெஞ்சனின் உழைப்பால் ஆண்மை பெற்ருேம். "என் நாடு பொன் நாடு" எனத் தமிழன் உள்ளம் பூரிக்கும் நேரத்திலே வீரன் மறைந்த செய்தி கேட்டு மனம் இடிந்தது மட்டுமல்ல, திராவிடத்திலே பொலுபயஸ் தோற்றத்தைக்கண்டு திடுக்கிட்டுப்போனேம். தான் அடிமைப் பட்ட காரணத்திற்காக எதிரிகளின் வற்புறுத்தலின்பேரில் கிரேக்க நாட்டை தாழ்வாகவும், ரோம் நாட்டைச் சிறப்பாகவும் சரித்திரம் எழுதித்தந் தான் உயிருக்குப் பயந்த கோழை பொலுபயஸ். அவனை மக்கள் மதிக்கவுமில்லை, அவன் வீரனய் வாழவுமில்லை. எனவே, திராவிடத்திலும் பல பொலுபயஸ்கள் தோன்றுவதைப்பற்றி நாம் கவலை கொள்ளவுமில்லை. ஆனல், எங்கள் மாவீரன் அழகிரி தன் இன மக்களுக்காக சலியாது உழைத்தவர். அந்த வீரனின் மறைவுக்கு ஓர் நினைவைக்கொண் டாட மறந்துவிட்டது நன்றிகெட்ட திராவிடர் கழகம். ஆண்டு தவருது பெரியாரின் ஆண்டு விழாக்கொண்டாடிய திராவிடர்க் கழகம், வருங் கால திராவிட நாட்டு சரித்திரத்தில் இடம்பெறும் ஓர் மாவீரனின் மறைவை நினைவாக கொண்டாட மறந்தது நன்றிகெட்ட செய்கை என்று கூறுவதோடு ஓர் நல்லறிவாளரைக் கழகம் தலைவராக ஏற்காதது தான் காரணம் என்ருல் குற்றமாகுமா?

திருவாரூர்,
29-7-49.

அன்புள்ள,
**P. V. லிங்கம்.**



ஆசிரியர்:— P. V. லிங்கம்.

# மறைந்த மாவீரன்!

"ஏ! தமிழினமே! எங்கள் தந்தை உனது தன்மானம் கருதி தளராது உழைத்தார். மனிதன் மனிதனாய் வாழவேண்டுமென்று அரும்பாடு பட்டார். மறைந்தார்! உன்னிடையே நாங்கள் வாழுகின்றோம்" எனக்கூறி நம்மைப்பார்த்து சிறித்திடும் **ஐந்து மக்கள்!**

"என்மீது கொண்டுள்ள அன்பைவிட இந்த தமிழகத்தின்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார், என் சுகத்தைக் கருதாவிட்டாலும் இந்த நாட்டின் சுகத்திற்காகத்தான் ஓயாது உழைத்தார், அவரை ஏன் இந்த தமிழகம் மறைக்க வேண்டும்?" என்று மனித சமுதாயத்தைப் பார்த்து பரிதாபக்கோலத்துடன் கேட்கும் **அருமை மனைவி.**

தமிழர் இனத்திற்காக தன் மானப்போர் செய்த வீரன், அஞ்சா நெஞ்சன் என்றெல்லாம் மக்கள் கூறிடக்கேட்டு, அவன் வீரனாய் வாழட்டும், அவன் உழைப்பு மக்களின் நல்வாழ்க்கைக்குப் பயன்படட்டும் என்று எண்ணி எண்ணிப்பூரித்த உள்ளம், மகன் மறைவுகண்டு, சோகத்தால் வெம்பிய **வயோதிகத் தாய்.**

இவர்களை தமிழகத்தில் இன்று காணுகின்றோம். நமது அருமைத் தோழன் **அழகிரி** மறைந்துவிட்டார்.

விஷம் கொடுத்து கொல்லப்பட்டாரா? தூக்கி விடப்பட்டாரா? துன்மார்க்கன் துப்பாக்கியாலா? மதவெறியர்களின் தாக்குதலினலா? இல்லை. நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டு, உடல் நிலை தளர்ந்து இயற்கையோடு இரண்டறக்கலந்தார். அழகிரியின் உடல் மறைந்தது ஆனல், அவர் நம் உள்ளத்தில் வாழ இடம் பெற்றுவிட்டார் வாழுகின்ருர்.

பழமை சாகும் தருவாயில் புதுமை பிறக்கிறது. காலவெள்ளத்தால் பழமை அடித்துச் செல்லப் பட்டு புதுமை பூக்கின்றது. புதுமையும் வெள்ளத் தின் வேகத்திற்காய்ந்து கருகி பழமையாகி அழிந்துவிடுகிறது. மீண்டும் புதுமை!

இது உலகியல், அறிவு வளர்ச்சி ஆராய்ச்சி யாளர்களின் வாழ்க்கையில் காணப்படுகிறது. **மனித உரிமைகள்,** துரோகிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களினல் காப்பாற்றப்பட்டுள்ளன. **பகுத்தறிவு,** நாத்திகர் என்று பழிக்கப்பட்டவர் களினல் புகுத்தப்பட்டுள்ளது.

அரசனை "ஏன்"? என்று கேட்பது இராசத் துரோகம். அர்ச்சகனை "எப்படி"? என்று கேட்பது பாபகாரியம். அரியாசனமும், பலிபீட மும் இரட்டைப்பிறவிகள். மதகுரு இல்லையேல் மன்னன் இல்லை. மன்னன் இல்லையேல் மதகுரு இல்லை என்ற நிலை, இரு உலகங்கள் இவர்கள் ஆளுகையில். மக்களோ, ஒருவரின் வரிச்சுமையை யும், மற்றவரின் புராணக்குப்பையின் பளுவையும் சுமக்கின்றனர். அவர்கள் இருவரும் ஆண்டவ னின் அம்சம். மக்களைக் காக்கவும், தூய்மைப் படுத்தவும் ஆண்டவனல் அனுப்பப்பட்டவர்கள் என்று கருதப்படுகின்றனர். அவர்களின்

சொல்லே சட்டம்; மறுத்தால் மரிக்கவேண்டியது தான்.

உலகில் இந்த நிலைமைகள் இருந்தாலும், சேற்றில் மலர்ந்த செந்தாமரைபோல் அவ்வப் போது அறிஞர்கள் தோன்றாமலில்லை. அறிஞன் எண்ணத்தின் எல்லையை அதிகப்படுத்தி, பயமென் னும் பயங்கரக்கோட்டையைத் தகர்த்து தரைமட்ட மாக்கி, எண்ணக்கடலில் புதிய புதிய உலகைக் கண்டு, புதுமையை உலகிற்குத் தருகின்றான். ஆர வாரம், பதவி இவைகளின் பற்றின்றி உண்மை யையும், இன்பத்தின் இருபிடத்தையும் காண ஆசைப்பட்டு அலைந்து, தான் கண்டவற்றை மக் கள் பயன்பெறுமாறு பகர்கின்றான்.

இம்முறை இல்லாமலிருந்தால், இன்று இவ் வுலகு நாகரீகமற்றவர்களின் இருப்பிடமாகத்தான் இருந்திருக்கும். அறிஞர்கள் கொடுமையெனும் கொடிய விலங்கை வீழ்த்தி, மடமையை மாய்த்த வீரர்கள். அவர்களே புத்துலகை உண்டாக்கிப் பகுத்தறிவைப் புகுத்தி, மாநிலத்தோர் வாழ வழி வகுத்துத்தந்தவர்கள். அவ்வீரர்களின் படை வரிசையில் **அழகிரிசாமி**யும் ஒருவராவார்.

அழகிரிசாமி அகம்பாவியல்ல — ஆண்மை யாளர். ஆணவக்காரரல்ல - அஞ்சா நெஞ்சன் பசப்பு மொழிபேசுபவரல்ல-அனைவரையும் பாசத் தால் பிணைப்பவர். இரும்புப்பெட்டி அழைத்து விட்டால் அதனிடம் இன்முகம் காட்டிவிடமாட் டார். சீமான்களின் சீற்றத்தைக்கண்டு அவர் சித் தம் கலங்கியவரல்ல. (நம்செயல் கண்டு சிரித்தா விடுவார்கள்) என்று கூறுவார். இந்த நாட்டில் நான் உரிமையோடு வாழப்பிறந்தவன் அதற்கு

இடையூராக எதுவரினும் அதை தூளாக்கித்திரு வேன் என்ற திடமனது கொண்டவர்.

"வெங் கொடுமைச் சாக்காட்டில்
விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்"

என்ற உணர்ச்சி வித்தை நாட்டு மக்களின் இத யத்திலே புகுத்தியவர். இன்று அவரை நம்மிடம் இயற்கை விட்டு வைக்கவில்லை மறைத்தது.

அஞ்சா நெஞ்சனின் மறைந்த செய்திகேட்டு, இன்று தமிழகம் எவ்வாறு சோகத்திலாழ்ந்ததோ, இதுபோலத்தான் இருந்தது அன்று நடந்த நாகை சுயமரியாதை மாநாட்டின் அரை நாளைய நிகழ்ச்சி.

நாகை புகைவண்டி நிலையத்திலிருந்து, நாகை மணி, மாயவரம் நடராசன் இவர்களின் சகாக்கள் பாதுகாப்போடு தலைவர்களின் ஊர்வலம் புறப் பட்டது மாநாட்டுப்பந்தலுக்கு.

மணியின் முகத்திலே மகிழ்ச்சி இல்லை. நடராசன் கண்கள் சிவந்தன, தோழனைக்காணாத சோகத்தால் ஊர்வலம் மாநாட்டுப் பந்தல்போகும் வரை இருவரும் குனிந்த தலை நிமிரவில்லை. அவர் களுக்கு மட்டும்தானா? ஆயிரக்கணக்கான மக்க ளுக்கும் கூடத்தான் அந்த முகவாட்டம்.

பாண்டியன் பக்கத்தில் அமர்ந்திருக்க பவனி வரும் பெரியாரின் கண்கள் கூட்டத்தை துருவித் துருவித் தேடிக்கொண்டிருந்தது. முகத்திலே களை இல்லை பசி எடுத்த சிங்கத்தின் தோற்றத்திலே காணப்பட்டார். காரணம் அந்த காளை அழகிரி காலை வண்டிக்கு வந்து சேரவில்லை. தலைவ

னில்லாத சேனையைப் போலத்தான் சென்றது அந்த மாபெரும் ஊர்வலம்.

"ஏன் அழகிரி வரவில்லை?"
"உடல் நிலை சரியில்லையா?"
"உடல் நிலையை பொருட்படுத்த மாட்டாரே?"
"அழைப்பில் ஏதாகிலும் குற்றம் நேர்ந்திருக்குமா?"
"அழைப்பை எதிர்பார்க்கும் ஆசாமி அவரல்லவே?"
"வெளியூர் சென்றிருப்பாரா?"
"தலைவருக்கு தந்திகிடைத்திருக்குமே?"
"வழியில் ஏதாவது வம்பு நேர்ந்திருக்குமா?"
"என்ன வம்பு நேர்ந்தாலும் வராமலிருக்க மாட்டாரே?"

இப்படியாக பேசிக்கொண்டனர், அந்த வீர னின் வரவு காணுத பொது மக்கள். மாநாடும் ஆரம்பமாயிற்று. நிகழ்ச்சிகளுக்கிடையே மணியும் பனிரெண்டு ஆகிவிட்டது. இடைவேளை நேரம் இன்னும் வரவில்லை அந்த இன்முகத்தான். மக்க ளின் மனதிலே வெட்கம், சோகம், ஏமாற்றம் எல்லாம் ஒருங்கே கூடிக் கும்மாளமடித்தது. பகல் உணவுக்கு மாநாடு கலைந்து சென்றது. அவர் இனி வரமாட்டார் என்ற முடிவு செய்துவிட்டனர் மக்கள்.

சாப்பாட்டு விடுதியின் திண்ணை முகப்பிலே பெரியார், பக்கத்தில் பழைய தோல்பெட்டி, கைத் தடி, அலங்கோலமாய் கிடந்த ஆரஞ்சு நிற சால்வை, போர்க்களம் சென்ற மகன் வெற்றி யோடு திரும்புவாஞ, அல்லது மார்பிலே வேல்பட்டு வீழ்வாஞ இரண்டிலொன்றுதான் ஏற்படவேண்

டும் என்ற யோசனையில் ஆழ்ந்திருக்கும் பேராசை கொண்ட தந்தையைப்போல் காணப்பட்டார் பெரியார். சாப்பாட்டு வேளையே தவறுகிறது, அந்த வெறிகொண்ட கிழவரிடம் யார் போய் பேசமுடியும்? அங்கு நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக்கொண்டிருந்தனர், ஆனல் வெகு நேரமில்லை.

ஆறடி உயரம், ஐரோப்பிய உடை ஸ்பிரிங் போன்ற சுருண்ட தலைமயிரை படிய சீவிய கிராப் புத்தலை, கையில் இரண்டடிக்குமேலுள்ள திருக்கைவால் இந்தக் கோலத்துடன் குதிரை வண்டியினின்றும் கீழே குதித்தான் ஒரு சிங்கார புருஷன் ஒரு வினாடிதான் உற்றுப்பார்த்தார் பெரியார். ஐரோப்பிய உடையில் வந்தது யாருமில்லை அந்த அழகிரிதான்.

துரைக்கு ஏன் தாமதம்? என்று துடிப்பாகக் கேட்டார் பெரியார்.

ஆம்! தாமதித்துவிட்டது, இந்த தோளனை மன்னித்துவிடுங்கள் என்று குறும்புத்தனமான பார்வையுடன் கூறினர் அழகிரி. இந்த கேள்வியிலும், பதிலிலும் எவ்வளவோ கருத்துக்கள் பின்னிக்கிடந்தன.

மூன்றுபடிகளைத்தாண்டி தாழ்வாரத்தில் ஏறுவதற்குள் எங்கிருந்தோ வந்து அவரைச் சுற்றிலும் மொய்த்துவிட்டது இளைஞர்படைகள். கூட்டத்தில் களிப்பு! குதூகலம் வேடிக்கை! விருந்து! விருந்தென்றல் சாதாரணமல்ல, வருங்கால திராவிடத்தில் அண்ணுவாருங்கள், தம்பி! என் பக்கத்தில் அமரு, அன்பரே அருந்துங்கள் என்று நடை

பெறுமே அதுபோல அங்கு சமத்துவம் கொஞ்சி யது.

மறுபடியும் மாலை நிகழ்ச்சிக்கு கூடியது மாநாடு. அழகிரி! நான்போகிறேன், வந்து சேர் என்று சொல்லிப்புறப்பட்டார் பெரியார். போர்க் களம் செல்லும் வீரன் மகனுக்குச் சேதி சொல்லிப் புறப்படுவதுபோல. கைகளை பின்னல்கட்டியபடி அந்த ஏறு நடையுடையான் முன்னடக்க, இளைஞர் களின் படை பின் துடர்ந்து சென்றனர் மாநாட்டுப் பந்தலுக்கு, பாசறைக்குள் படையுடன் புகுந்த வீரனைக்கண்டு மக்கள் மனங்களித்தனர்.

மேடையில் அழகிரி! தோழர்களே! தாய்மார் களே! வாலிப இளம் சிங்கங்களே! என்றதென்ற லோடு துவங்கினர்.............சண்டமாருதம்............. சூராவளி...............இடி..............மின்னல் இத்தனை யும் கண்டனர் அந்த வீரனின் முழக்கத்தில்.

பெரியார் திகைக்க, பாண்டியன் விழிக்க, இளைஞர்களின் விழிகளிலே ஒளி வீச மூன்று மணி நேரம் முழக்கமிட்டார். வீரனின் விரிவுரையோடு வெற்றியாக முடிந்தது மாநாடு.

அழகிரிசாமி பேசும் கூட்டத்தில் ஆண்மை படைத்தவர்களால் மட்டும்தான் தலைமை தாங்க முடியும். அலங்காரப்பதுமைகளால் முடியாது. கார ணம் பொதுமேடை ஓர் போர் அரங்கமாகக்கூட மாறிவிடும்.

அன்று இரவு மணி பனிரெண்டு மாநாட்டுப் பந்தலின் மணற்பரப்பில் அழகிரி, மாயவரம் நடராசன், நாகை மணி, குஞ்சிதம்—குருசாமி எஸ். வி. லிங்கம், எஸ். பி. கிருஷ்ணன், சித்தக்காடு

ராமையா, காளியப்பன்............இந்த காளையரின் கச்சேரி! வெற்றிக்களிப்பு! விளையாட்டு! அன்று கண்ட அந்த கூட்டத்தின் காட்சி இன்னும் மனக் கண்ணை விட்டு அகலவில்லை.

தோழர்களோடு அளவளாவி அன்பைப் பறிமாறிய எங்கள் வீரன் அழகிரியை இந்த தமிழகம் மீண்டும் தரவாபோகிறது?

கடமையை நிறைவேற்றும் கர்மவீரன், ஆடம் பரவாழ்க்கையுடன் நீண்ட நாள் பகைகொண்டவர். திருவாரூருக்கு வந்தால் ரெங்கராசுவின் ஓட்டைக் குடிசைதான் ஒய்யாரமாளிகை, சிங்கத்தின் சோடாகடைதான் சிங்காரமண்டபம், முனிசிபல் கேணிதான் தென்றலுக்கேற்ற இடம். தோழ னின் வீடெல்லாம் தன் வீடு. தோழமை என்பதை தெவிட்டத் தெவிட்ட சுவைபார்த்தவர்.

ஆடம்பரவாழ்க்கையை அவர் அழைத்திருந் தால் அரை நொடியில் வந்திருக்கும், கையில் கடப் பாரையும்,, மண்வெட்டியும் கொண்டு உழைக்கத் தேவையில்லை. சீமான்களைக்கண்டு ஒரு சிரிப்புச் சிரித்திருந்தால் செல்வத்தைக் குவித்திருப்பார்.

அழகிரி பவனத்தை கட்டியிருக்கலாம், அவர் மனைவியின் பெயரால் மலர்த்தோட்டம் அமைத் திருக்கலாம். ஸ்பிரிங் சோபாவிலிருந்து ரேடியோ கேட்கலாம், உல்லாச வாழ்க்கையில் மிதக்கலாம், இருந்த இடத்திலேயே சீமான்கள் பலரோடு இசை வாணிகளின் இன்னிசைகேட்கலாம், லலிதா—பத் மினிகள் நடனத்தைக்காணலாம். அவர் ஒரு வள்ளல் என்ற பட்டத்தைக்கூட பெற்றிருக்கலாம் இந்த வகை கெட்ட நாட்டில்.

குடும்பமெனும் தேள்களின் கொட்டுகளைப் பெற்றவர். வறுமை எனும் வன்நெஞ்சன் அவருடைய இணைபிரியாத் தோழன் பிறந்து மண்மேல் இறக்கும் வரையில் அவர்பசியாது புசித்திடும் சுகத்தைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை. வறுமையைக்கண்டு அவர் அஞ்சவில்லை. லட்சியப் பாதையில் சென்ற அவரது நடை ஒரு சிறிதும் தளரவில்லை —

அவர் வாழ்க்கையில் பயம் என்பதையே பார்க்காதவர். அன்பாயிரு! ஆனல், அடிமையாயிராதே என்பதுதான் அவரது அடிப்படைக்கொள்கை. தன் தோழனுக்கெல்லாம் அதைத்தான் அடிக்கடிக் கூறுவார்.

நாங்களெல்லாம் மேடைகளில் கருத்தோடு பேசுவதற்கு தகுந்த ஆற்றலைப்பெற்றது அழகிரியால்தான் எனக்கூறி எதிர்கட்சிக்காரர்கள் கண்ணீர்விடும் அளவுக்கு நாட்டில் சிறப்பைப்பெற்றவர்.

மக்கள் நலனைக்கருதி, கட்சியின்பேரால் உழைத்து உழைத்து தன் வாழ்வையே பாழாக்கிக் கொண்ட ஒரு தோழன் — ஒரு தொண்டன் — ஒரு வீரன் உண்டென்றால் அது அழகிரிசாமி ஒருவர் தான் என்பதை யாரும் மறக்கமுடியாது.

திராவிடன், குடி அரசு படித்தால் நாஸ்திகன், சண்டாளன் துன்பார்க்கன், ஜாதி மதங்களைக் குறை கூறும் முட்டாள் என்றெல்லாம் மக்கள் பேசப்பட்ட காலம். சுயமரியாதைக்காரன் என்றால் மக்கள் நகைப்பர். "சுயமரியாதைச் சங்கம்"

என்று நிறுவப்பட்டால் அதன் விளம்பரப்பலகை இரவே காணமற்போகும். நாட்டிலே அந்த நிலை.

அழகிரிசாமி பேசும் கூட்டத்திற்குச்சென்ருல் வீட்டில் சாப்பாடுகிடையாது, தந்தை பேசமாட்டார், தாய் மனம் புழுங்குவாள், அண்ணன் தம்பிகள் விரோதம், குடும்பத்தை விட்டு வெளியேறும் நிலைமை, அடிமை வேலைக்கு ஆபத்து, பலரின் நிந்தனை, வசைச்சொல் இவ்வளவுக்கும் ஆளாகவேண்டும். இந்த நிலையிலேதான் அழகிரியின் உழைப்பு எதிர் நீச்சடித்தது.

அப்பொழுதும் அவர். மனம் தளர்ந்தாரில்லை. பக்குவமறியாத மக்கள் பகுத்தறிவுபெற இன்னமும் நாம் பாடுபடவேண்டும் அன்பதைக்கூறி, துவண்டுவிடும் தோழனுக்கெல்லாம் தோள் வலிமை தந்தவர்.

வைக்கம் வீரனின் பெயரால் வாசகசாலை குஞ்சிதம்—குருசாமி காதல்—கலப்புத் திருமணம் சுயமரியாதைச் சங்கத் திறப்பு விழா எல்லாம்கூட நடந்தேறியது என்ருல் அதை ரசமற்ற பாலைவனத்தின் நீரோடைகள் என்பதற்குத் தானே ஒப்பிடமுடியும்.

இன்று அமைதியோடு நடைபெறும் பொது மேடைகள், அதை பொறுமையோடு கேட்கும் சக்திவாய்ந்த மக்கள் என்ற நிலையைக் காண்கிருேம். அன்று இந்த நிலையை காணமுடியாது.

அந்த அஞ்சா நெஞ்சன் அழகிரி அழித்த பயங்கர காடுதான் இன்றைய திராவிடர்க்கழக எழிற்பூங்கா.

அந்த மாவீரன் உழைத்து விதைத்த விளைச்சல்தான் இன்றைய திராவிடர்க் கழகத்தின் அறுவடை.

அந்த இரும்புள்ளம் படைத்தவன் இறைத்த வீரத்தின்மீது எழுப்பப்பட்ட அரண் தான் திராவிடர்க் கழகம் என்பதை யாரும் மறக்கமுடியாது.

"கபடம்" ஒழியவேண்டும், பழமையின் பெயரால் நடைபெறும் "பாதகங்கள்" பொடிபட வேண்டும், எங்கும் எவருக்கும் உரிமைவேண்டும், விடுதலைவேண்டும், சமத்துவம்வேண்டும், இவைகளைக்காண இளைஞர்கள் பணிபுரியவேண்டும் என்று மக்களிடம் கூறிய மாவீரன், மனைவி, மக்களையும் நம்மையும் விட்டுப்பிரிந்தார். அந்த வீரனின் குடும்பம் தமிழரின் கோட்டம் அதை வலம் வருவதே ஒவ்வொரு தமிழனின் கடமையுமாகும்.

"என்னால் ஆகும் என எண்ணுவோனுக்கு எல்லாம் ஆகும்" என்று கூறிய ஆபிரகாம் லிங்கன் போன்றவர் அழகிரிசாமி. மனதில் எண்ணியதை செய்து முடிக்கும் ஆற்றல்படைத்தவர். பிறரது ஏளனத்தையும், கண்டனத்தையும், எதிரிகளின் அச்சுறுத்தலையும், நண்பர்கள் கைவிட்டாலும் கவனியாது சரித்திரத்தில் கீர்த்திவாந்த செயலை— அடிமைகளின் விடுதலையை செய்து நிறைவேற்ற அரும்பாடுபட்டவர்.

113786

அடிமைத் தளையினின்று மக்களை விடுவிக்க மக்கள் மக்களாய் வாழ, சுதந்திரம்பெற, சமத்துவம் தழைக்க, விடுதலைகாண வீரமுடன் போராடிய, துருக்கி கமால், ரஷ்ய லெனின், சைன சன்யாட் சன்போன்ற வீரர்களைப் பின்பற்றியவர்.

அழகிரிசாமி — அழகிரிசாமியிடம் நம்பிக்கை வைத்தவர். கோழைத்தனம் அவரை நெருங்க முடியவில்லை. எதையும் அவர் அரைமனதோடு செய்ய நினைப்பதில்லை.

திடமனதுடைய ஒரு மனிதனின் முன் எந்தத் தடையும் எதிர்த்து நிற்பதில்லை. உலகமே அவனைக் கண்டு வழிவிலகி நிற்கும். பிரமிக்கும்படி அவன் வேலை செய்தால், தன் நம்பிக்கை என்னும் ஆயுதம் தடைகளை அறுத்தெறிந்துவிடும். ஆனால், "என்னால் முடியாது" என்று எவன் சொல்லுகிறானே அவனால் உண்மையில் எதுவும் செய்யமுடியாது தான். அவனை சீர்படுத்த எந்த தத்துவ ஞானத்தாலும் முடியாது.

Impossible என்னும் வார்த்தை தங்களது மொழியின் அகராதியிலும்கூட இருக்கக்கூடாது என்று ஆங்கிலேயருடன் வாதாடிய நெப்போலியன்போன்ற வீரன் அழகிரிசாமி.

ஏளனத்தையும், கண்டனத்தையும், பழிச்சொல்லையும், இழிவையும் பொருட்படுத்தாது தன்னில் மட்டும் நம்பிக்கைவைத்து வெற்றிக்குப் போராடியவர். எனவே தான் வறுமை அவர் மனதை சிதைக்கவில்லை, துர்ப்பாக்கியம் அவரை பின்வாங்கச் செய்யவில்லை. என்னவந்தாலும், எது நேரிட்டாலும் தான் குறிவைத்துள்ள இலக்கைத்தொடர்ந்து முன்னேறிச் சென்றுகொண்டிருந்த வீரன்.

நீ உன்னைச் சுற்றிலும் தோல்வியால் வேலியிட்டுக்கொண்டு, சந்தேகம், தைரியவீனம் முதலிய தோல்விச் சின்னங்களைப்பற்றியே எண்ணிக்

கொண்டுமிருந்தால், நீ கட்டாயம் தவறுவாய். நிமிர்ந்து நில். நேரே நோக்கு தோல்வி எண்ணங்களைத்தகர், தைரியமற்ற நினைவுகளை ஒழி, அசாத்தியம் என்பதை அகற்று, நீ குறியாகவைத்த லட்சியத்தை தொடர்ந்து தளரா நெஞ்சத்துடனும், இடைவிடா ஊக்கத்துடனும் முன்னேறிச்செல்; அப்படியாயின் உனது தடைகளை தகர்த்தெறிவாய். அது தான் உனது வெற்றியின் பாதை என்பதை இந்நாட்டு இளைஞர்களுக்கு எடுத்துரைத்தார்.

இன்று அந்த மாவீரன், ஏ! துர்ப்பாக்கியத் தமிழகமே! வனப்பும் வலிமையும் இழந்த உனக்காகவும், உன்னிடையே வாழும் மக்களுக்காகவும் உழைத்தேன், உருக்குலைந்தேன் எனது உழைப்பின் உண்மைகண்ட நீ நன்றியோடிருப்பாய் என நம்பி உன்னிடம் எனது மனைவி மக்களை ஒப்படைக்கிறேன் பார்த்துக்கொள் எனச்சொல்லி மறைந்தார்.

அஞ்சா நெஞ்சனின் மறைவு இந்த அவனியோருக்கு ஆற்றொணாத்துயரத்தைத்தான் தந்துவிட்டது. அழகிரி இந்த நாட்டில் இன்னும் வாழ வேண்டும் என நம்பி **அண்ணா** அரும்பாடுபட்டார். ஆம்! வீரனுக்குத்தானே தெரியும் வாளின் அருமை, ஆனாலும் இயற்கை, மனித எண்ணத்தை மாய்க்கும் தன்மைபடைத்ததாயிற்றே! அண்ணாவின் ஆசைக்கு அது இடந்தரவில்லை மாவீரன் மறைந்தார். தோழமை என்பது மாபெரும் சக்தி வாய்ந்தது என்பதை கண்படைத்தோர் கண்டிருக்கலாம் அண்ணாவின் கண்ணீர் துளிகளிலே.

மாபெரும் வீரனை மறைத்து விட்டோம் என்று தமிழகம் எண்ணினால் அது தவறு.

நன்றிகெட்ட தமிழகம்! தன் நிலையை உணராத தமிழகம்! ஒருவனை செல்லப் பிள்ளையாயும், ஒருவனை சீரழிந்தவனுயும் வைத்துப் பார்த்திருக்கும் பாரபட்சமுள்ள தமிழகம்! என்னிடம் ஆண்டானுமுண்டு அடிமையுமுண்டு எனப்பெருமை கொள்ளும் வெட்கமில்லாத் தமிழகம்! நிதியில் குறைவா நான் தருகிறேன் என்று கூறிய கலைவாணனின் தன்மைகண்டு தலைகுனிந்த தமிழகம்! சமுதாயத்திலே பல ஜாதிப்பிரிவுகள், அதனுலேற்படும் பல ஏற்ற தாழ்வுகள் அதைப்பார்த்துக்களிக்கும் தமிழகம்! என் நாட்டு மக்கள் வறுமையில் நெளியவும், வஞ்சகரின் சூட்சியால் வாடவும் கண்டு சகியேன் என்ற ஓர் வீரனை மக்களிடமிருந்து மறைத்த தமிழகம்!

•

ஆனல், தமிழகமே! அழகிரியை மறைத்துவிட்டாய்! உண்மைதான். இதோ எங்கள் இதயத்தைத் திறந்துபார்! அங்கு நீ காண்பாய் அந்த வீரன் ஊட்டிய உணர்ச்சிகளெல்லாம் தழும்பாகிக் கிடப்பதை. அழகிரி மறைந்தாலென்ன? அதற்காக நாங்கள் மருட்சிகொள்ளவில்லை. என்ருே ஓர் நாள் அவர் மறைய வேண்டியவர்தான். இனி அறியாமை எங்கள் மக்களிடம் தலைகாட்ட முடியாது. தோல்வி எங்களைத் திரும்பிக்கூட பார்க்க முடியாது. அன்று அமெரிக்க சுதந்திரப்போரிலே வாஷிங்டன் ஏந்திய வாளைக்காட்டிலும், பெவினின் பேனு முனையே வெற்றிக்குக் காரணமாயிருந்தது. எனவே, அண்ணுவின் பேனுமுனைகொண்டு, நாங்கள் வெற்றிபெறுவோம். இன்னும் அதோ பார் களம்புகும் காளையர்கள், தமிழன் தருவதில் தலைசிறந்தவன் என்பதை நிரூபித்த கலைவாணர்கள், புரட்சிக் கவிஞர்கள் எல்லோருமுண்டு எங்களிடம். உனது துர்ப்பாக்கிய நிலைமையை உணர்ந்துதான்

நாட்டிலே பல அண்ணாத்துரைகளைக்கூட உற்பத்தி செய்துவிட்டார் அண்ணா இதை நீ அறிந்துகொள்.

அந்த வீரன் மறைவுக்கு நாம் எதைக்கொண்டும் ஆறுதலடைய முடியாது. அந்த அன்புடைய தோழனின் மீது கொண்ட பற்றினைத் துணை கொண்டு, சூள் உரைத்திடவேண்டும். அழகிரி மறைந்துவிட்டார் அன்று செல்வம் மறைந்தது போல். மறவோம் அவரை — எங்கள் இதயத்திலே அவர் குடியேறிவிட்டார்.

வீரா! நீ இறக்கவில்லை — நீ மறையவில்லை. இதோ இருக்கிறாய் எங்கள் அகக்கண்ணின் முன்னே — என்றும் இருப்பாய் — எங்கள் வெற்றியில் கலப்பாய்—நீ துவக்கிய பணியினை முடிப்போம் எனக்கூறி தமிழ் நாட்டினர் யாவரும் அழகிரிசாமிகளாய் இந்த நாட்டில் வாழ்ந்து வழி வகுப்போமாக.

**வாழ்க மாவீரன் புகழ்!**

ஹோமியோ கலர் பிரஸ், நேதாஜி ரோடு திருவாரூர்.

# அழகிரிசாமி நூல் நிலைய வெளியீடுகள்.

ஆசிரியர்:— **P. V.** லிங்கம்.

## வஞ்சகப் பெரியார்!

திராவிடத் தன்மானத் தந்தையின் தொண்டு, நாட்டிற்கு அவர் செய்த அரிய சேவைகள் இவைகளைக்கொண்டது.

## என். எஸ். கே. ஏன் பிறந்தார்?

(கலைவாணரைப்பற்றிய சில கருத்துகள்)

நகைச் சுவை அரசு N. S. கிருஷ்ணன் நாட்டில் ஏன் பிறந்தார்..................?

## அவள் வாழ்வு.

(சமூக சித்திரம்)

......................மோகன, மனித சமுதாயத்தில் உரிமையோடு, வாழப்பிறந்தாள். சமுதாயம் அவளை வாழவிடவில்லை..........ஆனல் எதிர்த்து வாழத்தான் செய்தாள் எப்படி..............?

விபரங்கள் :—

அழகிரிசாமி நூல் நிலையம்,
"பெரியார் காட்டேஜ்"
82, காரைக்காட்டுத் தெரு, திருவாரூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 AUG 1949
MADRAS

இயற்கை, மணம், குணம், காரம்,
இவைகளில் நிகரற்றது.

# மணிக்கொடி

## வேதாரண்யம் புகையிலை

தேர்ச்சிபெற்றவர்களின் மேற்பார்வையில்
பயிரிட்டு, பதம் செய்து பக்குவமாக
தயார் செய்தது.

தயாரிப்பவர்:-

**T. சிங்காரவேலு பிள்ளை,**
மணிக்கொடி புகையிலை தொழிற்சாலை,
வேதாரண்யம்.

---

## உல்லாச ஓடம்.

(எழுதியவர்:- **P. V.** லிங்கம்)

பெரியார்-மணியம்மை பொருந்தாத் திருமணத்தையும், வாழ்க்கைப் பாதையின் கோணல்களையும் வகுத்துக் காட்டும் ஓர் கருத்திதழ்.

அழகிரிசாமி நூல் நிலையம்,
82, காரைக்காட்டுத்தெரு,
திருவாரூர்.

ஹோமியோ கலர் பிரஸ், திருவாரூர். 49.